எண். 1017/இசநி/நேஉ/2018

**இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறை**

**புதுச்சேரி**

புதுச்சேரி, நாள் 13-11-2020

**செய்திக்குறிப்பு**

கேரள மாநில அரசு இத்தாண்டு வரும் 16/11/2020 முதல் மகரவிளக்கு பூஜை வரை சபரிமலையில் பக்தர்கள் அனுமதிப்பதற்கு கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் எண்ணத்தோடு பக்தர்களுக்கு கீழ்க்காணும் ஏற்பாடுகளை செய்யப்போவதாக தெரிவித்துள்ளது :

1. கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2. வார நாட்களில் 1000 பேரும், வார இறுதி நாட்களில் 5000 பேரும், மகர பூஜை காலங்களில் 5000 பேர் மட்டுமே கேரள உயர்நீதிமன்ற அறிவுரைக்கு தகுந்தவாறு அனுமதிக்கப்படுவார்கள்.

3. சபரிமலைக்கு வரும் பக்தர்கள் தரிசனத்திற்கு முன் 24 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட ஆன்டிஜென் கொரோனா வைரஸ் பரிசோதனையில் பாதிப்பு இல்லை என்ற சான்றிதழோடு வந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

4. கொரோனா வைரஸ் பரிசோதனை செய்ய மாவட்ட நிர்வாகத்தினால் தனியார் பங்களிப்போடு பரிசோதனை மையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

5. 10 – 60 வயதிற்குட்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்

6. 60 – 65 வயதிற்குட்பட்டவர்கள் மருத்துவரிடம் இருந்து இணை நோய்கள் இல்லையென்ற சான்றிதழோடு வந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

13/11/2020

..2/-

7. பக்தர்கள் இணையதள மூலம் முன்பதிவு செய்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு உரிய அனுமதி வழங்கப்பட்ட பின் மட்டுமே சபரிமலைக்கு வர அனுமதிக்கப்படுவார்கள். மேலும், இணையவழி முன்பதிவு செய்யாமல் செல்பவர்கள் கட்டாயம் அனுமதிக்கப்படமாட்டார்கள்

8. பக்தர்கள் வழக்கமாக நீராடும் பம்பையில் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீராடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கு மாற்றாக குளியல் தடுப்பு நீராடும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

9. நிலக்கல், பம்பை, சன்னிதானம் போன்ற எந்த இடத்திலும் பக்தர்கள் தங்குவதற்கு அனுமதி இல்லை.

10. இலவச அபிஷேக நெய் வழங்கும் முகப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டு பக்தர்கள் வழங்கப்படவுள்ளது.

11. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பக்தர்கள் இலவச மருத்துவ சேவை பெறுவதற்கு ஆயுஷ் மான் பாரத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அட்டையினை கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

12. பக்தர்கள் வடசேரி பம்பா, எரிமேலி பம்பா ஆகிய இரண்டு வழிகளில் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவார்கள்

13. காட்டு வழிகளில் பயணம் செல்ல கட்டாயம் அனுமதி கிடையாது

14. கொரோனா சேவை செய்யும் மருத்துவர்கள் மற்றும் இதர மருத்துவ பணியாளர்கள் சபரிமலை தேவசம் நிர்வாகத்தை அணுகி தன்னார்வ சேவை செய்ய அனுமதி பெறலாம்

..3/-

12/11/2020

15. கேரள அரசால் பக்தர்கள் வசதிக்காக அவசர தேவைக்கு கீழ்க்காணும் தேவஸ்தான கட்டுப்பாட்டு மற்றும் காவல் துறை சிறப்பு அதிகாரியின் எண்கள் தொடர்பு கொள்ளலாம் :

- 04735 – 202016 & 9847000100 (கட்டுப்பாட்டு அறை)
- 04735-202029 (காவல் துறை சிறப்பு அதிகாரி)

மேலும், புதுச்சேரி அரசால் கீழ்க்காணும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

- கொரோனா ஆன்டிஜென் பரிசோதனை செய்ய எற்பாடுகள் செய்யபட்டுள்ளது.

- புதுச்சேரி அவசரகால செயல் மையம் 0413 – 1077, 0413 – 1070, 0413 – 2253407 மற்றும் காவல் கட்டுப்பாட்டு அறை 0413 – 1030 தொடர்பு கொள்ள ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளன.

எனவே, பக்தர்கள் இந்தாண்டு உரிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு சாமி தரிசனம் செய்யுமாறு இந்து சமய நிறுவனங்கள் துறை மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

13/11/2020

**(அ. சிவசங்கரன்)**
**ஆணையர்**
**இந்து சமய நிறுவனங்கள் துறை**